## சுருக்கம்

தகவல் தொழில்நுட்பவியல் துறை – தமிழ் இணையக் கல்விக் கழகம் – கணித்தமிழ் பேரவைகளை மேலும் 100 கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களில் தொடங்கிச் செயற்படுத்துவதற்கு நிதி வழங்கிட ஏதுவாக தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

தகவல் தொழில்நுட்பவியல் (நிர்வாகம்–2) துறை

அரசாணை (ப) எண். 28 நாள்: 04.07.2019

விளம்பி, ஆனி–19,

திருவள்ளுவர் ஆண்டு–2050.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (ப) எண்.6, தகவல் தொழில்நுட்பவியல் (நிர்வாகம்–2) துறை நாள்: 29.02.2016.
2. தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர், சென்னை அவர்களின் 18.12.2018 நாளிட்ட கடித எண்.2891/ க.பே.த/2016.

***

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கணித்தமிழ் வளர்ச்சியைப் பெருக்கிடும் நீண்டகால நோக்கிலும், அதன் முக்கியத்துவத்தை எதிர்காலத்தலைமுறையினர் உணர்ந்து செயல்படும் விதத்திலும், கணித்தமிழ் பேரவைகள் கல்லூரிகள் தோறும் உருவாக்குவதற்கு முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள 100 கல்லூரிகளில் கணித்தமிழ் பேரவைகள் தொடங்க ஒரு கல்லூரிக்கு ரூ. 25,000/- வீதம் ரூ. 25,00,000/- அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் இணையக் கல்விக்கழக இணை இயக்குநர் (மு.கூ.பொ) அவர்கள், முதற்கட்டமாக 100 கல்லூரிகளில் கணித்தமிழ் பேரவை தொடங்கப்பட்டு, 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதனால் பயன் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகம், தனது 66 ஆவது இயக்குநர் குழுக் கூட்டத்தில் மேலும் 100 கல்லூரிகளில் கணித்தமிழ் பேரவைகள் தொடங்கிச் செயற்படுத்துவதற்குக் கருத்துரு அரசுக்கு அனுப்ப அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் மேலும் 100 கல்லூரிகளில் கணித்தமிழ்ப் பேரவை தொடங்கத் தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் திட்டமிடப்பட்டு ஆதார நிதியாக ஒரு கல்லூரிக்கு ரூ.25,000/– வீதம் 100 கல்லூரிகளுக்கு மானியமாக ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்து தக்க அரசாணை வழங்குமாறு தமிழ் இணையக் கல்விக்கழக இணை இயக்குநர் (மு.கூ.பொ) அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தமிழ் இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களது கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ் இணையக் கல்விக்கழகம், மேலும் 100 கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களில் கணித்தமிழ் பேரவைகள் தொடங்கி செயற்படுத்துவதற்கு கல்லூரி/பல்கலைக்கழகம் ஒன்றிற்கு ஆதார

நிதியாக ரூ.25,000/- வீதம் 100 கணித்தமிழ் பேரவைகளுக்கு நிதி வழங்கிட ஏதுவாக தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் :

2202-பொதுக் கல்வி-03. பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் - 102. பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி – மாநில செலவினங்கள் – BK. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் - 309. உதவித் தொகை - 03 . குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (துதொகு 2202-03-102-BK-0913)
(IFHRMS Code : 2202-03-102-BK-30903)

5. மேலே பத்தி –3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுத் துணைப்பணி" (New Instrument Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ.1) துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தெவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின விதிகள் 1963–இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு அரசு துணை செயலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கு உரிய கருத்துருவையும் 2019–2020 –ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (தொழில்கள் /வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு அரசு துணை செயலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைப் பெற்று இயக்குநர், தமிழ் இணையக்கல்விக் கழகம் அவர்களுக்கு ECS மூலமாக தமிழ் இணையக்கல்விக் கழகத்தின் இந்தியன் வங்கி, கோட்டூர்புரம் கிளை எண்.01303 IFS குறியீட்டு எண்.IDIB000T117, நடப்புக் கணக்கு எண்.955548440–இல் பற்று வரவு வைப்பதற்குப் பிரிவு அலுவலர், தகவல் தொழில் நுட்பவியல் (பட்டியல்) துறை, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித் (தொழில்) துறையின் அலுவல் சார்பற்ற எண்.28211/ நிதி(தொழில்கள்)/2019, நாள் 01.07.2019–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதியொதுக்க பேரேட்டு எண்.560 (ஐநூற்று அறுபது)

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தோஷ் பாபு
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (மு.கூ.பொ), தமிழ் இணையக் கல்விக்கழகம்,
அண்ணா பல்கலைக் கழக வளாகம், காந்தி மண்டபம் சாலை, கோட்டூர், சென்னை–25.

பிரிவு அலுவலர், தகவல் தொழில் நுட்பவியல் (பட்டியல்) துறை, சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9. (இரண்டு நகல்கள்)
உள்ளுறைத் தணிக்கை அலுவலகம், சென்னை–9.
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை–9/18.

<u>நகல்:</u>

செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் –613 010.
தமிழ் வளர்ச்சி இயக்குநர், எழும்பூர், சென்னை–8.
மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்),சென்னை–35.
நிதி (தொழில் / வ.செ.பொ.I / வ.செ.பொ.II)த் துறை, சென்னை – 9.
அரசு செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில்நுட்பவியல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

5/7/19